பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இயக்குநர், சென்னை-6 அவர்களின்**
**செயல்முறை ஆணை**
**முன்னிலை: மரு.எஸ்.குருநாதன், எம்எஸ்., (ஜிஎஸ்),**

ந.க.எண். 000209/நிபி8/1/2021

நாள்: 24.06.2021

பொருள்: நிர்வாகம் - தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு.ப.கோவிந்தராஜ், த/பெ. திரு.ச.கே.பழனிச்சாமி, முன்னாள் அறுவை அரங்கு உதவியாளர், அரசு தலைமை மருத்துவமனை, ஈரோடு இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் - பணி வரன்முறை – ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை:

1) அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2) அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 26.06.1995.
3) அரசாணை (நிலை) எண்.168, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 19.10.2000.
4) அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 12.03.2007.
5) அரசாணை (நிலை) எண்.10, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 13.02.2009.
6) அரசாணை (நிலை) எண்.202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 08.10.2009.
7) இவ்வியக்கக பணிநியமன ஆணை எண்.70891/நிபி8/1/2012, நாள் 01.03.2019.
8) இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை எண்.11457/நி2/2/2019, நாள் 07.03.2019.
9) கரூர் மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலக கடித ந.க.எண்.979/நி2/2019, நாள் 31.12.2020.
10) அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 26.02.2021.
11) அரசு கடித எண்.8755/எடி2/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எடி2) துறை, நாள் : 16.03.2021.

*****

**ஆணை:**

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அறுவை அரங்கு உதவியாளராகப் பணிபுரிந்து இயலாமை காரணமாக மருத்துவச் சான்றின் அடிப்படையில் 20.08.2002 அன்று பிற்பகல் ஓய்வு பெற்ற திரு.ச.கே.பழனிச்சாமி மகனும் வாரிசுதாருமாகிய திரு.ப.கோவிந்தராஜ் (பிறந்த தேதி 09.06.1985) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500-62000/- நிலை 8 (Level 8) என்ற சம்பள முறையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

/2...

ஈரோடு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அறுவை அரங்கு உதவியாளராகப் பணிபுரிந்து இயலாமை காரணமாக மருத்துவச் சான்றின் அடிப்படையில் 20.08.2002 அன்று பிற்பகல் பணி ஓய்வு பெற்ற திரு.எ.கே.பழனிச்சாமி என்பவர் 18.05.1976 முற்பகல் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, 17.05.1978 தகுதிகாண்பருவம் முடித்துள்ளார், அவரின் பிறந்த தேதி 01.07.1951, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 31.07.2009 ஆகும். இயலாமை காரணமாக மருத்துவச் சான்றின் அடிப்படையில் பணி ஓய்வு பெற்ற அரசு ஊழியரின் மகன் திரு.ப.கோவிந்தராஜ் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

திரு.ப.கோவிந்தராஜ், பிறந்த தேதி 09.06.1985, அவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தாலும், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்தாலும், திரு.ப.கோவிந்தராஜ் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தற்காலிக இளநிலை உதவியாளராக, கரூர் மாவட்ட இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு 13.03.2019 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ப.கோவிந்தராஜ் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை 10இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 13.03.2019 முற்பகல் முதல் அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

எஸ்.குருநாதன்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர்

பெறுநர்
திரு.ப.கோவிந்தராஜ்,
இளநிலை உதவியாளர்
நலப்பணிகள் இணை இயக்குநர், கரூர்.
--- நலப்பணிகள் இணை இயக்குநர், கரூர் மூலமாக.

நகல்
நலப்பணிகள் இணை இயக்குநர், கரூர்.
நிர்வாகப் பிரிவு 2 (2 நகல்கள்)
நிர்வாகப் பிரிவு 2 (முதநிலை)
இருப்புக் கோப்பு / உதிரி

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //
இணை இயக்குநர் (நிர்வாகம்)

ந.க.எண் : 974/நிஅ/2021

இணை இயக்குநர்
நலப்பணிகள் அலுவலகம்
கரூர்
நாள் : 12.07.2021

// அனுப்பப்படுகிறது

நிருவாக அலுவலர்
நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகம்
கரூர் 639 001.

பெறுநர்
1. திரு.ப.கோவிந்தராஜ், இளநிலை உதவியாளர், நலப்பணிகள் இணை இயக்குநர் கரூர்
– உரிய வழியாக